**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3 தாராபுரம்**
**அ.வ.எண். 415/2023**

2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 12–ம் நாள் புதன்கிழமை **வா.சா.2**

சாட்சியின் சாட்சியம் திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | ஜான்பால் | தொழில் |
| த/பெ | ஜேக்கப் | கிராமம் |
| வயது | | தாலுகா |
| | | மாவட்டம் |

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு**
**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் வாதி கேட்டுக்கொண்டதற்கு இணங்க தான் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். வாதி என்னுடைய உறவினர் என்று சொன்னால் சரிதான். வழக்குச் சங்கதிகள் வாதி சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான் எனக்கும் தெரியும். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலம் வாதியால் தயார் செய்யப்பட்டு நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்து நத்தம் நிலவரி பட்டா எண்.145 ன் படி என்னுடைய மாமனாருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். என்னுடைய மாமனாருக்கு மூன்று பெண் மக்களும் ஒரு ஆண்மகனும் உண்டு. மேற்படி பெண் மக்களில் ஒருவரான எஸ்தர் என்னுடைய மனைவி. என்னுடைய மனைவிக்கு உடல்நிலை சரியில்லை என்பதை காட்டவும் அவருக்கு ஞாபக மறதி இருப்பதை காட்டவும் ஏதேனும் மருத்துவச் சான்றுகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அவர் நல்ல உடல் நிலையிலும் நல்ல ஞாபக சக்தியுடனும் தான் உள்ளார்கள் என்றாலும் நான் வழக்குக்காக அவ்வாறு இல்லை என்று பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய மனைவிக்கு தெரியாமல் தான் நான் இன்று சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

2. பட்டா எண். 145 க்கான சர்வே எண் எனக்கு தெரியாது. தாவா சொத்தில் செக்குபந்தி விவரங்கள் எனக்கு தெரியாது. தாவா வீடு கிழக்கு வாசல் கொண்டது. தாவா சொத்தின் சர்வே எண் செக்குபந்தி மற்றும் வழக்கு மூலங்கள் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய மாமனார் தன்னுடைய பெண்களுக்கு எவ்வளவு சீர்வரிசை செய்தார்கள் என்று குறிப்பாக நான் என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தை குறிப்பிடவில்லை

என்றால் சரிதான். அவ்வாறு சீர்வரிசை எதுவும் செய்யாததால் தான் அதை நான் எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய மாமனார் உயிரோடு இருந்த காலத்தில் தாவா சொத்தை குறித்து எழுத்து மூலமான நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான் வாய்மொழியாக பேசினார். அவ்வாறு எந்த தேதியில் பேசினார் என்பது குறித்து என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் நான் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். என்னுடைய மாமியார் இறந்த 1999 ம் வருடம் அக்டோபர் மாதத்திற்கு பிறகு 16 வது நாள் காரியத்தின் போது என்னுடைய மாமனார் மேற்படி சங்கதி குறித்து பேசினார். மேற்படி சங்கதி பேசப்பட்ட தேதியை குறித்து அல்லது யார் முன்னிலையில் பேசப்பட்டது என்பது குறித்து என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் நான் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான்.

3. என்னுடைய மனைவியை விசாரித்தால் தான் நடந்த விபரங்கள் தெரியும் என்று சொன்னால் சரிதான். மேற்படி விவரங்கள் எதுவும் தெரியாமல் நான் முதல் விசாரணை வாக்குமூலத்தில் வாதியின் தூண்டுதலின் பேரில் மேற்படி சங்கதிகளை தெரிவித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சங்கதிகுறித்து என்னுடைய மனைவி சாட்சி அளித்தால் இவ்வழக்கின் உண்மை நிலவரங்கள் தெரிந்து விடும் என்பதால் தான் அவரை நான் சாட்சியாக இந்த நீதிமன்றத்திற்கு கூட்டி வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய மாமனாரின் சொத்துக்கள் குறித்து அவரது வாரிசுகள் நான்கு பேருக்கும் பாத்தியம் உள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்வதற்கு நான் மட்டும் ஒத்துவராததால்தான் இன்னும் மேற்படி வழக்கு தாக்கல் செய்யப்படாமல் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. வாதியின் தூண்டுதலின் பேரில்தான் நான் இந்த வழக்கில் சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வாதி செலுத்திய வரி விபரங்களை நான் நேரடியாக பார்த்ததில்லை.

4. வழக்கு சொத்து வாதி மற்றும் மேற்படி பழனியின் வாரிசுகள் அனைவருக்கும் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்பதால் இந்த வழக்கை வாதிமட்டும் தாக்கல் செய்திருப்பது ஏற்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. வாதிக்கும் 1–ம் பிரதிவாதிக்கும் உள்ள தனிப்பட்ட பிரச்சினை காரணமாக வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. அதனால்தான் என்னுடைய மனைவியோ அல்லது இன்னொரு பெண் வாரிசான சரஸ்வதி என்பவரையோ இந்த வழக்கில் நான் தரப்பினராக வாதி சேர்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அவர்களை தரப்பினராக சேர்த்தால் இந்த வழக்கு பொய் வழக்கு என்பது தெரிந்துவிடும்

என்பதால் தான் அவர்களை வேண்டுமென்றே தரப்பினராக சேர்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. ரவாதி என்னுடைய உறவின் என்பதால் அவர் கேட்டுக் கொண்டதற்கு எனக்கு நான் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் 1–ம் பிரதிவாதி சுவாதீனத்தில் உள்ளார் என்று சொன்னால் சரியல்ல அவர் தன்னுடைய சொந்த வீட்டில் குடியிருக்கிறார். வாதி தாவா சொத்தில் தனிப்பட்ட சுவாதீனத்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.11.12 18:08:49 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.